# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075270

C

1. District : மாவட்டம் திருவாரூர்     PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு திருவாரூர்     Year: ஆண்டு 2021     FIR No.: மு.த.அ. எண் 09/2021     Date: நாள் 4/10/2021

2. (i) Act சட்டம்:     Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்:     Sections பிரிவுகள்: 102 CRPC & 7 of PC

   (iii) Act சட்டம்:     Sections பிரிவுகள்: amemended act 2018

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 4/10/2021     Date from : நாள் முதல்     Date to : நாள் வரை 1830 hrs To 20.30hrs

   Time Period : நேர அளவு     Time from : நேரம் முதல்     Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 4/10/2021     Time : நேரம் 23.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்     Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண்     (b) Address : முகவரி 5 km வ.கி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்     District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. ஜெகதீசன்     (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ரெங்கசாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 37/21     (d) Nationality : நாட்டினம்     (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்     Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர்     (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தஞ்சாவூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. B. ஜெகேசன் 51/21 த/பெ பாலகிருஷ்ணன், உதவி மாவட்ட அலுவலர், மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மீட்பு பணிகள் துறை திருவாரூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது:

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.R.சித்ரா ஆகிய நான் 04.10.2021-ந் தேதி தேதி 23.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.R.ஜெகதீசன், என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு. R.ஜெகதீசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் பெறுநர் : காவல் துணை கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருவாரூர் அய்யா இன்று 04.10.2021-ந் தேதி திருவாரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகத்தில் மருத்துவமனைகள், திருமணமண்டபங்கள், வணிக வளாகங்கள், வெடிக்கடைகள் போன்றவற்றிர்க்கு தடையின்மை சான்று மற்றும் உரிமம் புதுப்பித்து வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு வெடிக்கடை உரிமையாளர்களிடம் கையூட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் தஞ்சாவூர் மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் R.ஜெகதீசன், ஆகிய நான் மற்றும் திரு.சந்திரசேகரன், துணை வட்டாட்சியர்/தலைமை உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

4/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.R.CHITRA)
Rank: நிலை ...................No. எண் Inspector VCAC 4/10/21

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

மன்னார்குடி, என்பவருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றும், மேற்படி தகவலை தெரிவித்தும், அதன் பொருட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று 04.10.2021 ந்தேதி 17.30 மணியளவில் புறப்பட்டும், திருவாரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகத்தில் 18.30 மணி முதல் 20.30 மணி வரை திடீர்சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனை போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.முருகேசன், உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அவர்கள் தனது அரசு பணியை செய்வதற்கு கையூட்டாக பெற்றிருந்த தொகை கைப்பபற்றப்பட்ட ரூ.30,110/- திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் இவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் இவர் தற்காலிகமாக திருவாரூர், விஜயபுரம், No.19/3, ASP Colony, பெரியமில் தெருவில் வசிக்கும் அவரது வீட்டினை சோதனையிட்ட போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரூ.90,500/- வீடுசோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை இத்துடன் ஒப்படைக்கிறேன். உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் XXXXXX (R.ஜெகதீசன்) 04.10.2021 திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 04.10.2021-ந் தேதி திருவாரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகத்தில் மருத்துவமனைகள், திருமணமண்டபங்கள், வணிக வளாகங்கள், வெடிக்கடைகள் போன்றவற்றிற்க்கு தடையின்மை சான்று மற்றும் உரிமம் புதுப்பித்து வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு உரிமையாளர்களிடம் கையூட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் தஞ்சாவூர் ஆய்வு குழு ஆய்வாளர் R.ஜெகதீசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் ஆகிய நான் மற்றும் திரு.சந்திரசேகரன், துணை வட்டாட்சியர்/தலைமை உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், மன்னார்குடி, என்பவருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றும், மேற்படி தகவலை தெரிவித்தும், அதன் பொருட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று 04.10.2021 ந்தேதி 17.30 மணியளவில் புறப்பட்டும், திருவாரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகத்தில் 18.30 மணியளவில் வந்தும், மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கை விவரம். இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம் 1. திரு. R.ஜெகதீசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் 2. திரு.சந்திரசேகரன், துணை வட்டாட்சியர்/தலைமை உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், மன்னார்குடி. 3. திருமதி.G.R.சித்ரா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். திடீர் சோதனை குழுவினரை மேற்படி அலுவலகத்தில் உள்ள அலுவலர்களுக்கு அறிமுகம் செய்து கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது திருவாரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அலுவலர்கள் விவரம். 1. திரு.ச.வடிவேல், த/பெ சண்முகம், மாவட்ட அலுவலர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருவாரூர். 2. திரு.முருகேசன், த/பெ பாலசுப்பிரமணியன், உதவி மாவட்ட அலுவலர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருவாரூர். 3. திருமதி.ரஞ்சிதமலர், க/பெ T.நடராஜன், கண்காணிப்பாளர், மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர். 4. திரு.தமிழ்ச்செல்வன், த/பெ மாணிக்கம், இளநிலை

உதவியாளர், மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர். 5. திரு.N.ரவி, த/பெ நரசிம்மன், சிறப்பு நிலைய அலுவலர், வலங்கைமான், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர். 6. திரு.V.ஆடலரசன், த/பெ வீரசோழன் தீயணைப்பு வீரர், அயல்பணி மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர். 7. திரு.இளையராஜா, த/பெ குட்டிசாமி, தீயணைப்பு வீரர், அயல்பணி மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர். 8. திரு.V.G.P.சந்தோஷ்குமார், த/பெ G.பக்கிரிசாமி, ஓட்டுனர், தீயணைப்பு வீரர், அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர். மேற்படி திருவாரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகம், திருவாரூர் நேதாஜி சாலையில் சேதுராமன் என்பவருக்கு சொந்தமான ரெங்கவிலாஸ் காம்பிளக்சின் முதல் தளத்தில் கிழக்கு பார்த்தவாறு ஆர்.சி.கட்டிடத்தில் அமைந்துள்ளது. இந்த அலுவகத்தின் உள்ளே நுழைந்தவுடன் கண்ணாடி அடைப்புடன் உள்ள அறையில் திரு.முருகேசன், உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, அவர்கள் அமர்ந்திருந்தார். இவரது அறைக்கு வடக்கு பக்கம் மாவட்ட அலுவலர் அவர்களின் அறையும், தெற்கு பக்கம் அலுவலக அறையும் உள்ளது. முதலில் திரு.முருகேசன், உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, அவர்களை விசாரிக்க, இவர் அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.25,000/- ஒரு வெள்ளை கவரில் போடப்பட்டு இருந்ததையும், மேலும் இவரது பேன்ட் வலது பக்க பாக்கெட்டில் இருந்து ஒரு பர்சும், முத்துப்பேட்டை தீயணைப்பு மீட்பு பணி நிலைய அலுவலர் என்று சீல் உள்ள வெள்ளை நிற கவரில் ரூ.4,000/- இருந்ததையும் எடுத்து ஆஜர்படுத்தினார். இவர் ஆஜர் படுத்திய இவரவது பர்சை சோதனையிட்டதில் அதில் துண்டு சீட்டில் சுற்றி வைக்கப்பட்டு ரூ.1,110/- இருந்தது. இந்த துண்டு சிட்டில் இரண்டு பக்கமும் சில விபரங்கள் பேனாவினால் எழுதப்பட்டிருந்தது. இதுகுறித்து விசாரிக்க ரூ.25,000/- NOC வழங்க பெற்றது எனவும் மற்ற பணம் அதன் பேப்பர் மற்றும் கவரில் எழுதப்பட்டிருந்தவாறு பெறப்பட்டது என்றும் தெரிவித்தார். மேலும் இவரை விசாரிக்க இவர் தற்காலிகமாக திருவாரூர், விஜயபுரம், No.19/3, ASP Colony, பெரியமில் தெருவில் வசிப்பதாகவும், கடந்த மாதம் மருத்துவமனை, வணிகவளாகம், வெடிக்கடை, கல்யாண மண்டபம் ஆகியவற்றிற்கு உரிமம் மற்றும் NOC சான்று வழங்க ஆய்வுக்கு சென்றபோது வசூல் செய்த தொகையை வீட்டில் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். இவரது வாக்குமூலம் தனியாக பதிவு செய்யப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த திரு.ச.வடிவேல், த/பெ சண்முகம், மாவட்ட அலுவலர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருவாரூர் அவர்களை சோதனையிட அவரிடம் எவ்விதபணமும் இல்லை. திருமதி.ரஞ்சிதமலர், க/பெ T.நடராஜன், கண்காணிப்பாளர், மாவட்ட அலுவலகம், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருவாரூர் அவர்களை சோதனையிட இவருடைய கைப்பையில் ரூ.5,670/- இருந்தது. இது குறித்து அவரிடம் விசாரிக்க இவர் தனது வீட்டிற்கு மளிகை சாமான்கள் வாங்க வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேலும் ATM-ல் பணம் எடுத்தற்கான குறிப்பை தனது செல்போன் மெசேஜில் காண்பித்தார், அதனால் இவரிடமிருந்த ரூ.5,670/- இவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு.தமிழ்ச்செல்வன், த/பெ மாணிக்கம், இளநிலை உதவியாளர், மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர் அவர்களை சோதனையிட இவருடைய சட்டை பாக்கெட்டில் ரூ.1,740/- இருந்தது. இதில் ரூ.500/- அலுவலக PA Cash என்றும் மீதி இவருடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், இவரிடமே திரும்ப இந்தப்பணம் ஒப்படைக்கப்பட்டது. திரு.N.ரவி, த/பெ நரசிம்மன், சிறப்பு நிலைய அலுவலர், வலங்கைமான், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர் அவர்களை சோதனையிட இவருடைய சட்டை பாக்கெட்டில் ரூ.3,540/- இருந்தது. இது அவருடைய சொந்தப்பணம் என்றும், மேலும் ATM-ல்

பணம் எடுத்ததற்கான குறிப்பை தனது செல்போன் மொபைலில் காண்பித்தார். அதனால் இந்த ரூ.3,540/- தொகை இவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு.V.ஆடலரசன், த/பெ வீரபோமன் தீயணைப்பு வீரர், அயல்பணி மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர் அவர்களை சோதனையிட இவருடைய சட்டை பாக்கெட்டில் ரூ.50/- இருந்தது. இது இவருடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், இவரிடமே மீண்டும் இந்தப்பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு.இளையராஜா, த/பெ குட்டிசாமி, தீயணைப்பு வீரர், அயல்பணி மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர் அவர்களை சோதனையிட இவருடைய சட்டை பாக்கெட்டில் ரூ.300/- இருந்தது. இது இவருடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், இவரிடமே மீண்டும் இந்தப்பணம் ஒப்படைக்கப்பட்டது. திரு.V.G.P.சந்தோஷ்குமார், த/பெ G.பக்கிரிசாமி, ஓட்டுனர், தீயணைப்பு வீரர், அயல்பணி மாவட்ட அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், திருவாரூர் அவர்களை சோதனையிட இவருடைய சட்டை பாக்கெட்டில் ரூ.550/- இருந்தது. இது அவருடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், இவரிடமே மீண்டும் இந்தப்பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலவலகத்தில் பராமரிக்கப்படும் விடுப்பு விவரப்பதிவேடு - 2021, தாமத வருகை பதிவேடு - 2021, வருகை பதிவேடு-2021, தடையின்மைச் சான்று பதிவேடு – 2021, அலுவலக நான்கு சக்கர வாகனம் TN 50 G 0239-ன் பயணக்குறிப்பேடு (01.07.2020 முதல் 29.09.2021 வரை) ஆகிய பதிவேடுகளை மாவட்ட அலுவலர் அவர்கள் ஆஜர்படுத்தினார். இவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட தொகை குறித்த விபரம்.

| வரிசை எண் | விபரம் | கைப்பற்றப்பட்ட தொகை | தொகையின் விபரம் (முழு **Denomuination)** |
|---|---|---|---|
| 1 | நிலைய அலுவலா, தீயணைப்பு மீட்பு பணி நிலையம், முத்துப்பேட்டை 614 704 என்ற Seal வைக்கப்பட்ட White Color Cover | Rs.4000/- | 500X8 = **4000/-** |
| 2 | <u>துண்டு சீட்டில் முன் பக்கம்</u><br>AlMahal MPT<br>பாலகுரு – வல<br>PP Mahal<br>Ramchendre VLM<br>Ramcsh DRO<br>Ramcsh DRO<br>Sara – mgd<br>Sivasupr – VLM<br>Sumathi<br>Sun Barath<br><u>துண்டு சீட்டின் பின்புறம்</u><br>தனபால் - மன்<br>Kumar TTP<br>மணிகண்டன் ஆதிச்ச<br>ரகுராம் - கமலாபுரம்<br>சங்கர் - மன்<br>என்று முருகேசன் என்பவரால் (ADFO) கைப்பட துண்டு சீட்டில் எழுதப்பட்டுள்ளது முருகேசனின் பேண்ட் பாக்கெட் பர்ஸில் இருந்தது. | Rs. 1100/- | 500X2=1000/-<br>50X1= 50/-<br>20X2= 40/-<br>10X2= 20/-<br>------------<br>**1110/-** |

| | | | |
|---|---|---|---|
| 3 | Plain White Cover ல் இருந்த தொகை (முருகேசன் மேல் Shirt Pocket இருந்தவை) | Rs. 25000/- | 2000X12=24000/-<br>500X 2= 1000/-<br>-----------<br>25000/- |
| | கூடுதல் தொகை | | Rs.30,110/- |

மேற்படி திடீர் சோதனை இன்று 04.10.2021 ந் தேதி 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. வீடு சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 04.10.2021-ந் தேதி திருவாரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகத்தில் 18.30 முதல் 20.30 வரை திடீர் சோதனை மேற்கொண்ட போது, திரு.முருகேசன், த/பெ பாலசுப்பிரமணியன், உதவி மாவட்ட அலுவலர், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருவாரூர் அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் இவர் தங்கியிருக்கும் வீடு திருவாரூர், விஜயபுரம், No.19/3, ASP Colony, பெரியமில் தெருவில் உள்ளது. இந்த வீட்டினை திரு. R.ஜெகதீசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் திரு.சந்திரசேகரன், துணை வட்டாட்சியர்/தலைமை உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், மன்னார்குடி திருமதி.G.R.சித்ரா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர் ஆகியோர் இணைந்து 04.10.2021ஆம் தேதி 21.30 மணியளவில் சோதனை மேற்கொண்டதற்கான வீடு சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் விபரம். மேற்படி வீடு திருவாரூர் விஜயபுரத்தில், பெரியமில் தெருவில் ASP Colony யில் கீழ் தளத்தில் அமைந்துள்ளது. மேற்படி திரு.முருகேசன் என்பவரின் முன்னிலையில் அவரது வீட்டினை சோதனையிட்ட போது வீட்டின் நடு ஹாலில் தெற்கு பக்கம் இருந்த ஸ்டீல் மேஜை மேல் டிராயரில் பாரத் கேஸ் கவரிலும் மற்றும் ரூ.500/- நோட்டுகள் கத்தை கத்தையாக தனித்தனியாக மடித்து வைக்கப்பட்ட நிலையில் 5 கத்தைகளாக கீழ்கண்டவாறு இருந்தது.

| வரிசை எண் | விபரம் | கைப்பற்றப்பட்ட தொகை | தொகையின் விபரம் (முழு **Denomuination)** |
|---|---|---|---|
| 1. | **Bharathgas**<br>Sun Bharath Gas Agencies<br>No.43 Pambalamman Kovil Street<br>Near Railway Station<br>Needamangalam 614 404.<br>Ph : 04367 – 261138, 261235<br>என்று அச்சடிக்கப்பட்டிருந்த White Color Cover | Rs. 4000/- | 500X8 = 4000/- |
| 2. | ரப்பர் பேண்ட்-ல் தனிதனியாக முழுவதுமாக சுற்றப்பட்டிருந்த தொகையின் விபரம் | Rs. 2000/- | 500X4 = **2000/-** |
| 3. | ரப்பர் பேண்ட்-ல் தனிதனியாக முழுவதுமாக சுற்றப்பட்டிருந்த தொகையின் விபரம் | Rs. 5000/- | 500X10 = **5000/-** |
| 4. | ரப்பர் பேண்ட்-ல் தனிதனியாக முழுவதுமாக | Rs. 16000/- | 500X32 = **16000/-** |

| | | | |
|---|---|---|---|
| | கைப்பற்றப்பட்டிருந்த தொகையின் விபரம் | | |
| 5. | ரப்பர் பேண்ட்-ல் தனித்தனியாக முழுமையாக கைப்பற்றப்பட்டிருந்த தொகையின் விபரம் | Rs. 14500/- | 500X29 = **14500/-** |
| 6. | ரப்பர் பேண்ட்-ல் தனித்தனியாக முழுமையாக கைப்பற்றப்பட்டிருந்த தொகையின் விபரம் | Rs. 49000/- | 500X98 = **49000/-** |
| | கூடுதல் தொகை | | **Rs.90,500/-** |

மேற்படி ஹாலுக்கு வடபுறம் ஓர் அறையும், மேல்புறம் சமையல் அறையும் உள்ளது. ஹாலில் மேல்புறம் இருந்த அலமாரியை சோதனையிட்ட போது கீழ்கண்ட ஆவணங்கள் இருந்தது. 1) 04.10.2021ஆம் தேதி LIC சந்தா தொகை கட்டியதற்கான ரசீதுகள் - 751559456 ரு.635/-, 753829863 ரு.899/-, 754827141 ரு.1405/-, 756678883 ரு.19,805/-, 2) தடையின்மைச்சான்று (அசல்) ந.க.எண்.7452/அ1/2021 நாள்: 01.10.2021, 7469/அ1/2021 நாள்: 29.09.2021, 7487/அ1/2021 நாள்: 29.09.2021, 7473/அ1/2021 நாள்: 29.09.2021, 3090/அ1/2021 நாள்: 06.05.2021, 3) Fire and Rescue Service License R.C.No. 927/A1/2021, License No. ----/2021, Date 11.02.2021, 4) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை உதவி அலுவலர் திருவாரூர் அவர்களின் ஆய்வறிக்கை, நாள் 01.09.2020, 5) Appendix III, Form of Application for Applying Fire License, 6) தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம் கூத்தாநல்லூர், உதவி மாவட்ட அலுவலர் அவர்களது வருடாந்திர அறிக்கை நாள் 03.11.2020., 7) K.T.R. PERFUMERY INDUSTRIES தீ மற்றும் பாதுகாப்பு உரிமம் புதுப்பித்தல், 8) பேரளம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலைய ஆய்வறிக்கை, 9) Fire and Rescue Service License R.C.No. 578/A1/2021 No.20/2021, Date 29.01.2021, 10) Fire and Rescue Service License R.C.No. 1368/A1/2021 License No.----/2021, Date 01.03.2021, 11) பிரிவு 13 இணைப்பு 3 விண்ணப்பம் மற்றும் களப்பால் சாமிநாதன் 06.07.1979 தேதியிட்ட கிரய ஆவணம் மற்றும் No Objection Certificate 482/2019 உள்ள கோப்பு (மொத்த பக்கங்கள்-30) , 12) இந்திராணி விஜயபுரம் என்பவரது திருமண மண்டபத்திற்கு தடையின்மைச் சான்று விண்ணப்ப கோப்பு ( மொத்த பக்கங்கள்-18) 13) பாலாஜி தொழிற்பள்ளி தடையின்மைச்சான்று விண்ணப்பம் ( 2 Sheets), 14) மூவேந்தர் மனமகிழ் மன்றம் தடையின்மைச்சான்று விண்ணப்ப கோப்பு (மொத்த பக்கங்கள்- 20), 15) வேலுடையார் கல்வியியல் கல்லூரி தடையின்மைச்சான்று விண்ணப்ப கோப்பு (மொத்த பக்கங்கள்-44), 16) ரசூல்பீவி UR திருமண மஹால் தடையின்மைச்சான்று விண்ணப்ப கோப்பு ( மொத்த பக்கங்கள்-14) மேற்படி ஆவணங்களும் மற்றும் தொகை ரு.90,500/- உரிமம் மற்றும் தடையின்மைச்சான்று வழங்க, புதுப்பிக்க தீயணைப்பு நிலையங்களை ஆய்வு செய்ய வாங்கப்பட்ட கையூட்டு தொகை என்பதாலும் கைப்பற்றப்பட்டன. மேற்படி வீடுசோதனை இன்று 04.10.2021-ந் தேதி 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அய்யா, மேற்படி புகார், திடீர் சோதனை நடவடிக்கை மற்றும்

கைப்பற்றுதல் மகஜர், வீடு சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை 04.10.2021-ஆம் தேதி 23.30 மணிக்கு பெறப்பட்டது. இதன் மீது இன்று 04.10.2021-ஆம் தேதி 23.30 மணிக்கு திருவாரூர் V & AC கு.எண். 09/2021 பிரிவு 102 CrPC and 7 of Prevention of corruption Amendment Act 2018ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஒப்பம். G.R.Chitra, Inspector of Police, V&AC, TVR 04/10/2021

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

INSPECTOR OF POLICE,
VIGILANCE AND ANTI CORRUPTION,
THIRUVARUR.
4/10/21